ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1795/52 - 2013 පෙබරවාරි මස 01 වැනි සිකුරාදා - 2013.02.01

*1795/52 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1955 இன் வான்செலவு ஒழுங்குவிதிகள்*

*ஒழுங்குவிதி 126 இன் கீழான அறிவித்தல்*

**மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினைச் செயன்முறைப்படுத்தல்**

தென் மாகாணத்திலுள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அம்பாந்தோட்டை மற்றும் லுணுகம்வெஹெர ஆகிய நிர்வாகப் பிரதேசங்களிலுள்ள மத்தளவில் அமைவிடம் கொண்டுள்ள மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் உள்நாட்டு மற்றும் சர்வதேச வான் போக்குவரத்துச் சேவைகளின் செயற்பாடுகளுக்காக 2013, மாச்சு 18 ஆந் திகதியன்று திறந்துவைக்கப்படவுள்ளது என்பதனை இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம், வானூர்தியொன்று இலங்கையினுள் வருதல் அல்லது கடல்கடந்த இலக்குகளை நோக்கி மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து தரையிறங்கலுக்காகப் புறப்படல் அல்லது அவ்விமான நிலையத்தில் தரையிறங்கல் என்பனவற்றுடன், அவ் விமான நிலையத்தில் தேவைக்கேற்ப பயணிகள், சரக்குகள் மற்றும் தபால்கள் என்பனவற்றின் ஏற்றல் மற்றும் இறக்கல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினுள் நுழையும் அவ்வாறே வெளியேறும் வானூர்தி ஒவ்வொன்றும் பொருத்தமான தேசிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள் மற்றும் அமுலாக்கப்படும் நியமங்கள் மட்டுமன்றி, மேலும், கீழ் கையொப்பமிட்டோரால் வெளியிடப்படும் இலங்கை வானியல் தகவல் தொகுப்புகளில் வெளியிடப்படும் வானூர்தி உள்வருகை மற்றும் புறப்படுகையுடன் தொடர்புடையதாக உருவாக்கப்படும் ஒழுங்கு முறைகளுக்கும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு புறப்படும் மற்றும் உள்நுழையும் பிரயாணியும் பொருத்தமான தேசிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள், மற்றும் அமுலாக்கப்படும் நியமங்கள் மட்டுமன்றி, மேலும், தனிநபர்கள் மற்றும் பயணப் பொதிகள் என்பனவற்றின் உள்வருகை மற்றும் புறப்படுகையுடன் தொடர்புடையதாக உருவாக்கப்படும் ஒழுங்கு முறைகளுக்கும் அமைந்திருத்தல் வேண்டும். இவைகள் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு, விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் தாவர மற்றும் விலங்கியல் தொற்று நோய்க்காப்பு போன்றனவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் பரிசோதனை செய்முறைகளுக்கு உட்பட்டவையாக அமையலாம்.

தபால் மற்றும் ஏனைய பண்டங்கள் உள்ளடங்கலான அனைத்து சரக்குகளின் உள்வருகை அல்லது வெளியேறுகை, பொருத்தமான தேசிய சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள், மற்றும் அமுலாக்கப்படும் நியமங்கள் மட்டுமன்றி, மேலும், இலங்கை வானியல் தகவல் தொகுப்புகளில் வெளியிடப்படும் சரக்கு, தபால் மற்றும் ஏனைய பண்டங்களின் உள்வருகை மற்றும் புறப்படுகையுடன் தொடர்புடையதாக உருவாக்கப்படும் ஒழுங்கு முறைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும். மேலும், அவ்வாறான சரக்கு, தபால் மற்றும் ஏனைய பண்டங்கள், சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வு, விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம் மற்றும் தாவர மற்றும் விலங்கியல் தொற்று நோய்க்காப்பு போன்றனவற்றிற்குப் பொறுப்பான அரசாங்க நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் பரிசோதனை செய்முறைகளுக்கு உட்பட்டவையாக அமையலாம்.

விமான நிலையத்தின் பாதுகாப்பு எல்லைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக தீர்மானிக்கப்பட்ட எந்தவொரு பிரதேசத்திலும், நபரொருவரால் அல்லது வாகனமொன்றால் கொண்டுவரப்பட்ட ஏதாவது உருப்படி உள்ளடங்கலாக, விமான நிலைய செயற்பாட்டாளரால் வழங்கப்பட்ட காலாவதியற்ற நுழைவுச் சீட்டொன்றினை பெற்றுக்கொண்டு, அதனை வெளிப்படையாகக் காட்சிப்படுத்தியுள்ள நபர் அல்லது வாகனம் தவிர்ந்த, எந்தவொரு நபரும் உள்நுழையவோ அல்லது தங்கியிருக்கவோ முடியாது. மேலுள்ள நிபந்தனைகள் காலாவதியற்ற பயண ஆவணங்களை வைத்திருக்கும் பயணிகளுக்கும், விமான நிலையத்தினுள் நுழைந்து விமானப் பறப்புக்களை முடிவுறுத்துவதற்கான அல்லது விமான நிலையத்திலிருந்து விமானப் பறப்புக்களை மேற்கொண்டு வெளியேறும் காலாவதியாகாத பயணிகள் விமானமேறல் அனுமதிச் சீட்டொன்றினை வைத்திருக்கும் பயணிகளுக்கும் பொருத்தமற்றதாக இருக்கும்.

எச். எம். சீ. நிமல்சிறி,
சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை,
இல. 4, ஹுணுப்பிட்டிய வீதி,
கொழும்பு 02.
2013, சனவரி 31.

02-608

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.